# ரோக்மா இலவச அஞ்சல்வழி வேதாகமக் கல்வி

தபால் பெட்டி எண் - 9, No.8, பாரதியார் 2 வது தெரு, S.S. காலனி மதுரை – 10. Ph. 0452 – 4354302

# நியாயப்பிரமாணமும் கிருபையும், விசுவாசமும் கிரியைகளும்

## முன்னுரை :

கிறிஸ்தவ ஜீவியத்தில் விசுவாசமும் கிரியைகளும் பயனுள்ளதாகவும் அவைகளின் இடத்தை உடையதாகவும் இருக்கிறது என்பதை எந்தவிதமான வாக்குவாதமின்றி ஏற்றுக்கொள்ளலாம். கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு ஒரு விசுவாசி நீதிமானாக்கப்படுகிறான். ஆனால் அவனுடைய கிரியைகளுக்கு ஏற்றாற்போல வெகுமதிகளைப் பெறுவான். இக்கருத்து உண்மை என்பது தெளிவாய் இருக்கிறது. பெரும்பான்மையினர் கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு ஒரு மனிதன் நீதிமானாக்கப்படுகிறான் என்ற கருத்தை ஏற்றுக்கொள்கின்றனர். ஆனால் ஒரு சாரார், ஒரு விசுவாசி நீதிமானாக்கப் படுவதற்கு கிருபை, விசுவாசம் போதாது, கிரியைகள் அதாவது ஞானஸ்நானம், அதோடு தொடர்வுடைய சட்டதிட்டங்களும் அவசியம் என்று வற்புறுத்து கின்றனர். இரட்சிக்கப்படுவதற்கு கிரியைகள் அவசியம் என்று வற்புறுத்தும் பொழுது ஒரு பாவியை மறுபடியும் நியாயப்பிரமாணச் சட்டத்தின் கீழ் உட்படுத்துவதாகும். நாம் நியாயப்பிரமாணச் சட்டத்திற்கு உட்பட்டவர்கள் அல்ல, கிருபைக்கு உட்பட்டவர்கள் என்று வேதாகமம் தெளிவாகப் போதிக்கிறது. சிலர் நினைப்பது போல் மாறுபட்ட இக்கருத்துக்களுக்கு சரியான பதில் கொடுப்பது எளிதான காரியம் அல்ல. யாக்கோபு தம்முடைய நிருபத்தில் ஒருவர் கிரியைகளினாலே நீதிமானாக்கப்படுகிறார் என்று சொல்லுவதுபோலத் தோன்றுகிறது.

பவுல் தம்முடைய நிரூபத்தில் ஒருவர் விசுவாசத்தினாலே நீதிமானாக்கப்படுகிறார் என்று சொல்லுவதுபோலத் தோன்றுகிறது. யாக்கோபு கூறுவது, பவுல் கூறிய கருத்துக்களுக்கு முரண்பாடானதாக இருக்கிறது என்று தவறுதலாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். ஏன் மார்ட்டின் லூத்தரே யாக்கோபு நிரூபத்தை ‘‘வைக்கோலின் நிருபம்’’ என்று கூறியிருக்கிறார். இப்பாடத்தில் நியாயப்பிரமாணச் சட்டம், கிருபை, விசுவாசம் கிரியைகள் முதலானவைகளுக்கு வேதம் என்ன பொருள் கொடுக்கிறது என்பதையும் அவைகளின் நோக்கத்தையும் நீங்கள் சரியாகப் புரிந்துகொள்ளும் வகையில் விளக்குவதே எங்களுடைய முக்கிய நோக்கம் ஆகும்.

## இப்பாடத்தின் முக்கியத்துவம் :

கிறிஸ்தவர்கள் என்று சொல்லக்கூடிய இலட்சக்கணக்காக பேர்கள் இரட்சிப்பின் நிச்சயத்தைக் குறித்து உறுதியற்ற வர்களாக இருக்கிறார்கள். இப்படிப்பட்ட கிறிஸ்தவர்களிடத்தில் இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்களா என்று கேள்வி கேட்கும் பொழுது அவர்கள் கொடுக்கக்கூடிய பதில் எங்களால் முடிந்ததை நாங்கள் செய்கிறோம் என்று கூறுகிறார்கள். இப்படிப்பட்ட பதிலானது அவர்களின் நற்கிரியைகள், நல்நடத்தை இவைகளின் அடிப்படையில் அவர்களின் இரட்சிப்பு அமைத்திருக்கிறது என்பதை வெளிப்படுத்துகிறது நற்கிரியைகள், நல்நடக்கை இரட்சிப்பின் நிச்சயத்தைக் கொடுக்காது என்பதையும், மேலும் இவைகள் பரிசுத்த தெய்வதை திருப்திபடுத்தாது என்பதையும் இப்படிப்பட்ட கிறிஸ்தவர்கள் அறியாமல் இருக்கிறார்கள். நீங்கள் இரட்சிப்பின் நிச்சயத்தை உடையவர்களாக இருக்க விரும்பினால் விசுவாசம், கிரியைகள் இவைகளின் நோக்கம், நிலை முதலியவற்றை நன்கு அறிந்து கொள்ளவேண்டியது அவசியமாய் இருக்கிறது. நியாயப்பிரமாணச்சட்டம், கிருபை முதலான காரியங்களும் இருக்கிறது. நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய் கொடுக்கப்பட்டது கிருபையும் சத்தியமும் இயேசுகிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின.

ஒரு விசுவாசி முற்றிலுமாகக் கிருபையினாலே இரட்சிக்கப்பட்டிருக்கிறாரா? அப்படியானால் நியாயப்பிரமாணம் ஏன் கொடுக்கப்பட்டது? அது விசுவாசியின் வாழ்க்கையில் எந்த இடத்தை வகிக்கிறது? அதைக் குறித்து விசுவாசியின் கருத்து என்ன? தேவன் நியாயப்பிரமாணத்திலிருந்து கிருபைக்கு திருப்பியிருப்பதனால் நியாயப்பிரமாணத்தில் உள்ள குறை என்ன? கிருபை என்றால் என்ன? கிருபையிலிருந்து விழுந்து போகுதல் என்பதற்கு பொருள் என்ன? நியாயப்பிரமாணமும், கிருபையும் சேருமா? கிறிஸ்தவ வாழ்க்கைக்கும், இரட்சிப்புக்கும் கிருபை கொண்டிருக்கிற தொடர்பு என்ன? மேற்கூறிய பதங்களை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாய் இருக்கிறது. அப்படி தெளிவாக அறிந்து கொள்ளும் பொழுதே கிறிஸ்துவுக்குள்ளான உங்களது இரட்சிப்பின் நிச்சயத்தையும் அதனுடைய முழுமையையும் அதனுடைய பாதுகாப்பையும் நன்கு உணர்ந்து கொள்ள முடியும்.

பாடம்

## I. நீதிமானாக்கப்படுதலைக் குறித்து யாக்கோபுக்கும், பவுலுக்கும் இடையே காணப்படுகிற முரண்பாடுகள் :

அ. யாக்கோபு 2:14–26–ஐ வாசிக்கவும்.

ஆ. ரோமர் 4:2–5; எபேசியர் 2:8,9; தீத்து 3:5,6 ; ரோமர் 8:1 இந்த வசனங்களை வாசிக்கவும்.

இ. மேற்குறிக்கப்பட்ட வசனங்கள் சொல்லக்கூடிய காரியங்கள் :

1. யாக்கோபு – விசுவாசம் மட்டும் ஒருவரை இரட்சிப்பதில்லை
2. பவுல் – விசுவாசம் மாத்திரமே ஒருவரை இரட்சிக்கும்
3. யாக்கோபு – கிரியைகளினாலே ஒருவன் நீதிமானாக்கப்படுகிறான்
4. பவுல் – ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு கிரியைகளினால் உண்டானது அல்ல
5. யாக்கோபு – கிரியை இல்லாத விசுவாசம் செத்தாய் இருக்கும்
6. பவுல் –கிரியைகளைச் சார்ந்துள்ள விசுவாசமானது தேவனுடைய கிருபையை மட்டுப்படுத்துகிறதாய் இருக்கும்

## II. மேலே காணப்படுகிற பிரச்சனைக்குப் பதில் : விசுவாசம், கிரியைகள், நீதிமானாக்கப்படுதல் இம்மூன்று பதங்களையும் நன்கு அறிந்து கொள்ள வேண்டும்

**அ. விசுவாசம் :**

நமது இரட்சிப்புக்கு கிறிஸ்துவின் பலி மரணத்தில் வைக்கப்படும் உண்மையான விசுவாசம் என்று பவுல் எழுதுகிறார் (அப்போஸ்தலர் 16:31). மனந்திரும்புதல் அடங்கிய விசுவாசத்தைக் குறித்து பவுல் பிரசங்கித்தும், போதித்தும் இருக்கிறார் (அப்போஸ்தலர் 17:30, 20:21) கிறிஸ்துவை இரட்சகரென்றும், ஆண்டவரென்றும் இருதயத்திலிருந்து அறிக்கைபண்ணக்கூடிய விசுவாசத்தைக் குறித்து சொல்லியிருக்கிறார் (ரோமர் 10:9,10). இரட்சிப்புக்கு முழுவதுமாக கிறிஸ்துவின் மரணம், உயிர்த்தெழுதல் இவற்றில் வைக்கும் விசுவாசம் (ரோமர் 3:27,28, 4:5, 5:1,2; கலாத்தியர் 2:16; 3:24, 2:20; எபேசியர் 3:17; 1 தெசலோனிக்கேயர் 1:3; 2 தீமோத்தேயு 1:5 வசனங்களை வாசிக்கவும்).

யாக்கோபு தனது நிருபத்தில் குறிப்பிடுகிற விசுவாசமானது ஆழமில்லாத தாகவும், அறிவு சம்மந்தமானதாகவும், முற்றிலுமாக கனியற்றதுமாய் இருக்கிறது. இங்கு யாக்கோபு செத்துப்போன விசுவாசத்தைக் குறித்தே எழுதுகிறார். மரித்துப்போன விசுவாசம் இரட்சிக்குமா? இரட்சிக்காது. மரித்துப்போன விசுவாசம் அல்லது செத்த விசுவாசம் ஒருவரை இரட்சிக்கவோ, நீதிமானாக்கவோ மாட்டாது என்று நாம் வாசிக்கும் பொழுது மட்டுமே யாக்கோபு தம்முடைய நிருபத்தில் விசுவாசத்தைக் குறித்து கூறிய காரியங்களை தெளிவாக அறிந்து கொள்ளமுடியும். விசுவாசம் என்ற வார்த்தைக்கு முன்பு செத்த அல்லது மரித்த என்று வார்த்தையைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

**ஆ. கிரியைகள் :**

இரட்சிப்புக்கு நற்கிரியைகள் அவசியமல்ல. ஆனால் இரட்சிக்கப்பட்ட விசுவாசிகள் பொதுவாக நற்கிரியைகள் செய்ய வேண்டும் என்று பவுல் வலியுறுத்தி எழுதியிருக்கிறார். முக்கியமான வேதபகுதி எபேசியர் 2:9–10. ‘‘ஒருவரும் பெருமை பாராட்டாத படிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல’’ என்று கூறுகிறார் (வசனம் 9). அதே சமயம் நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம் (வசனம் 10) என்றும் கூறுகிறார். நியாயப்பிரமாணத்தினாலே அல்லது நற்கிரியைகளினாலே ஒருவர் இரட்சிக்கப்படக்கூடும் என்ற கருத்தை அப்போஸ்தலனாகிய பவுல் உடைத்துப்போட்டு விட்டார் (கலாத்தியர் 2:16; தீத்து 3:5,6; ரோமர் 4:5) இருப்பினும்

1. நற்கிரியைகளைச் செய்த விதவைகளைக் குறித்துப் பேசியிருக்கிறார்.
2. விசுவாசிகள் நற்கிரியைகளைச் செய்ய ஊக்கப்படுத்தும்படி தீமோத்தேயுவைக் கேட்டுக்கொண்டார் (1 தீமோத்தேயு 6:18).
3. அவர்கள் தேவனை அறிந்திருக்கிறோமென்று அறிக்கைபண்ணுகிறார்கள். கிரியைகளினாலே அவரை மறுதலிக்கிறார்கள் என்று தீத்துவுக்கு பவுல் எழுதியிருக்கிறார் (தீத்து 1:16).

கனியற்ற, வெறுமையான விசுவாசிகள் என்று சொல்லக்கூடியர்களைக் குறித்து யாக்கோபு எழுதியிருக்கிறார். மேலும் கிரியைகள் காணப்படவில்லையென்றால் அங்கே உண்மையான விசுவாசம் கிடையாது என்று சொல்லியிருக்கிறார். கிரியைகள் இல்லாத விசுவாசம் செத்ததாய் இருக்கும். நான் என் விசுவாசத்தை என் கிரியைகளினாலே உனக்குக் காண்பிப்பேன் என்பானே (யாக்கோபு 2:17,18). கிரியைகள் என்பது இயற்கையான விசுவாசத்தின் கனிகளாகும் என்று யாக்கோபு சொல்லுகிறார். ‘‘ஒருவனுடைய இருதயத்தில் கிருபையின் கிரியை இல்லையென்றால், அவனுடைய ஜீவியத்தில்

கிருபையின் செயலும் இருக்காது'' என்று **டாக்டர் ஐயோர்ன்ஸைடு** கூறியிருக்கிறார். ஆகவே உண்மையான விசுவாசம் கிரியைகள் உடையதாகவே இருக்கும்.

**இ. நீதிமானாக்கப்படுதல் :**

தேவனுடைய வல்லமையின் அடிப்படையில் (Sovereignty of God) அப்போஸ்தலனாகிய பவுல் இரட்சிப்பைக் கண்ணோக்கும் பொழுது தேவன் ஒரு மனிதனை விசுவாசத்தின் அடிப்படையில் மட்டுமே நீதிமானாக்கி, கிறிஸ்துவின் நீதியை அவனுக்குக் கொடுக்கிறார் (ரோமர் 3:21,22, 25–28; ரோமர் 4:5,6, 5:1). கிரியைகள் மூலமாக விசுவாசத்தை வெளிப்படுத்த வேண்டியது விசுவாசியின் பொறுப்பு என்பதை யாக்கோபு வலியுறுத்துகிறார். இரட்சிப்பை மனிதன் பார்க்கும் கண்ணோட்டத்தில் யாக்கோபு காண்கிறார் (யாக்கோபு 1:18–26). அப்போஸ்தலனாகிய பவுல் தேவனுடைய பார்வையில் நீதிமானாக்கப்படுதலைக் குறித்து எழுதி யிருக்கிறார். யாக்கோபு மனிதனுடைய பார்வையில் நீதிமானாக்கப்படுதலைக் குறித்து எழுதியிருக்கிறார். தேவன் மாத்திரமே காணக்கூடிய விசுவாசமானது மனிதன் காணக்கூடிய கிரியைகள் புறப்படுவிக்கிறது.

## III. கிரியைகள் – இரட்சிப்பு :

**அ. இரட்சிப்புக்குத் தொடர்பான கிரியைகள் :**

1. ரோமர் 4:5,6, ''ஒருவன் கிரியை செய்யாமல் பாவியை நீதிமானாக்குகிறவரிடத்தில் விசுவாசம் வைக்கிறவனா யிருந்தால் அவனுடைய விசுவாசமே அவனுக்கு நீதியாக எண்ணப்படும்.''
2. எபேசியர் 2:8,9, ''இது உங்களால் உண்டாதனல்ல; ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல.''
3. கலாத்தியர் 2:16, ''நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே எந்த மனுஷனும் நீதிமானாக்கப்படுவதில்லையே''
4. கலாத்தியர் 2:21 ''நீதியானது நியாயப்பிரமாணத்தினாலே வருமானால் கிறிஸ்து மரித்தது வீணாயிருக்குமே''
5. ரோமர் 11:6 ''அது கிருபையினாலே உண்டாயிருந்தால் கிரியைகளினாலே உண்டாயிராது.''
6. தீத்து 3:5 ''நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல். . . ''

நமது இரட்சிப்பில் கிரியைகளுக்கு இடமே இல்லை என்பதை மேலே குறிக்கப்பட்ட வசனங்கள் தெளிவாகப் போதிக்கிறது. ஆயினும், இரட்சிக்கப்பட்டவர்கள் நற்கிரியைகளைச் செய்ய வேண்டியவர்களாய் இருக்கிறோம். விசுவாசிகளானவர்கள் நற்கிரியை களைச் செய்ய ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் (1 தீமோத்தேயு 6:18; தீத்து 3:8).

**ஆ. இரட்சிப்புக்கு தொடர்பான விசுவாசம் :**

இரட்சிப்புக்கு விசுவாசமே அடிப்படையாக உள்ளது

1. எபேசியர் 2:8 ''கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்.''
2. ரோமர் 5:1 ''நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம்.''
3. அப்போஸ்தலர் 16:31, ''கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி... நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப் படுவீர்கள்.''
4. ரோமர் 1:16 ''கிறிஸ்துவின் சுவிசேஷத்தை விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவ பெலனாயிருக்கிறது.''
5. எபேசியர் 3:17 ''விசுவாசத்தினாலே கிறிஸ்து நம் இருதயங்களில் வாசமாயிருக்கிறார்.''
6. ரோமர் 3:28 ''மனுஷன் விசுவாசத்தினாலேயே நீதிமானாக்கப்படுகிறான்.''
7. பிலிப்பியர் 3:9 ''விசுவாச மூலமாய் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவனாயிருந்து.''

எளிய வார்த்தைகளில் சொல்வோமென்றால் நீங்களும், நானும் கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப் பட்டிருக்கிறோம். அத்துடன் சேர்க்கப்பட ஒன்றும் இல்லை.

## IV. கிறிஸ்தவ ஜீவியத்தில் கிரியைகளின் தொடர்பு :

1. உண்மையான விசுவாசத்திற்கு நற்கிரியைகளே ஆதாரமாக இருக்கின்றது (யாக்கோபு 2:14,17,20,22).
2. சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும் (2 கொரிந்தியர் 5:10).
3. இரட்சிப்பானது கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு பெற்றுக் கொள்ளப்பட்ட போதிலும் பரலோகத்தில் நமக்குக் கிடைக்கும் வெகுமதிகள் நாம் செய்த நற்கிரியைகளின் அடிப்படையில் கிடைக்கிறது.

4. கலாத்தியர் 5:6 "அன்பினால் கிரியை செய்கிற விசுவாசமே உதவும்." நமது அன்பின் செயலே நம்முடைய விசுவாசத்தை வெளிப்படுத்துகிறது.
5. வெளி. 14:13, அவர்களுடைய கிரியைகள் அவர்களோடே கூடப்போகும் பரலோகத்திற்கு உங்களது ஆஸ்தி, அந்தஸ்தை எடுத்துச் செல்ல முடியாது. ஆனால் உங்களுடைய கிரியைகள் உங்களைப் பின்தொடர்ந்து வரும்.

## V. கிறிஸ்தவ ஜீவியத்திற்கான விசுவாசத்தின் தொடர்பு :

1. விசுவாசத்தினாலே நாம் இரட்சிக்கப்பட்டதுமின்றி விசுவாசத்தைக்கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப் பட்டிருக்கிறோம் (1 பேதுரு 1:3).
2. நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன் (கலாத்தியர் 2:20).
3. நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம் (2 கொரிந்தியர் 5:6).
4. கிறிஸ்தவ வாழ்க்கை என்பது விசுவாச வாழ்க்கை. அனைத்து ஆவிக்குரிய அனுபவங்களுக்கு இதுவே ஆதாரமாக அமைகிறது.

   i) கிறிஸ்துவில் உள்ள விசுவாசத்தின் மூலம் உலகத்தில் உள்ள கஷ்டங்களையும், கவர்ச்சிகளையும், சோதனைகளையும் நாம் ஜெயிக்கிறோம் (1 யோவான் 5:4)

   ii) சாத்தானின் வல்லமை, தந்திரமான செயல்கள் இவற்றை விசுவாசத்தின் மூலம் முறியடிக்கலாம் (1 பேதுரு 5:9; எபேசியர் 6:16).

   iii) விசுவாசத்தின் மூலம் சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்கிறோம். மேலும் தேவனுடைய வாக்குத்தத்தங்களை கேட்கவும் முடிகிறது (எபிரெயர் 6:12).

   iv) மேலும் விசுவாசம் :

அ. பொருள்களின் தேவைகளைக் குறித்ததான கவலைகளிலிருந்து விடுதலை செய்கிறது (மத்தேயு 6:30–33).

ஆ. வாழ்க்கையில் எழும்பும் எல்லாவிதமான துன்பங்களையும் சந்திக்க தைரியம் கொடுக்கிறது (மத்தேயு 8:26).

இ. கவலைகள், சந்தேகங்கள் இவைகளை விடுத்து வாழ்வதற்கு உதவுகிறது (மத்தேயு 14:31,32)

## VI. ஒருவர் தன்னுடைய கிரியைகளினாலே நீதிமானாக்கப்படுகிறார் அல்லது இரட்சிக்கப்படுகிறார் என்று சொல்வோமென்றால் மறுபடியும் நியாயப்பிரமாணத்திற்கு உட்படுத்துகிறவர்களாய் இருப்போம்:

அ. கலாத்தியர் 5:1–6 வசனங்களை வாசிக்கவும். வசனம் 1–ல் "நீங்கள் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்துக் குட்படாமல் கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலைகொண்டிருங்கள்" என்று பவுல் நம்மை உற்சாகப்படுத்துகிறார். மோசேயின் நியாயப்பிரமாணச் சட்டத்தின் அடிமைத் தனத்திலிருந்து கிருபையின் மூலம் நமக்கு விடுதலை கிடைத்திருக்கிறது என்பதை விளக்குகிறார். வசனம் 2–லிருந்து 4–வரை விருத்தசேதனத்தைக் குறித்துப் பேசுகிறார். விருத்தசேதனம் யூதர்களுக்குக் கொடுக்கப்பட்ட ஒரு அடையாளமாகும். சில கள்ளப் போதகர்கள், புறஜாதியாரும் யூதரைப்போல விருத்தசேதனம் பண்ணப்பட வேண்டும் என்று போதித்தனர். அப்போஸ்தலனாகிய பவுல் 3 விதமான வாக்குவாதங்களை முன்வைக்கிறார். விருத்தசேதனம் பண்ணப்பட வேண்டுமென்று வற்புறுத்தும் பொழுது கீழ்கண்ட விளைவுகள் வரும்.

1. நீங்கள் விருத்தசேதனம் பண்ணிக்கொண்டால் கிறிஸ்துவினால் உங்களுக்கு ஒருபிரயோஜனமுமிராது (வசனம் 2)
2. விருத்தசேதனம் பண்ணிக்கொள்ளுகிற எந்த மனுஷனும் நியாயப்பிரமாணம் முழுவதையும் நிறைவேற்றக் கடனாளியாயிருக்கிறான் (வசனம் 3).
3. நியாயப்பிரமாணத்தினால் நீதிமான்களாக விரும்புகிற நீங்கள் யாவரும் கிறிஸ்துவை விட்டுப்பிரிந்து கிருபையினின்று விழுந்தீர்கள் (வசனம் 4).

<u>குறிப்பு :</u>

'கிருபையினின்று விழுந்தீர்கள்' என்ற சொற்றொடர் மற்ற வேதபகுதிகளைக் காட்டிலும் அதிகமாக தவறுதலாக மொழியாக்கம் செய்யப்பட்டு, தவறுதலாக பொருள் கொள்ளப்பட்டிருக்கிறது. மேலும் இவ்வேத வாக்கியத்தை மையமாக வைத்து இரட்சிப்பு நஷ்டப்பட்டுவிடும் என்று அநேகர் போதிக்கின்றனர். ஒருவன் கிறிஸ்துவின்மேல் மட்டும் விசுவாசம் வைத்தால் போதாது, விருத்தசேதனமும் பண்ணப்பட வேண்டும் என்று வற்புறுத்தும் பொழுது அவனை நியாயப் பிரமாணத்திற்கு கீழ் உட்படுத்துவதும், அதுமட்டுமல்லாமல் கிருபையை மட்டுப்படுத்துவதாகவும் இருக்கும் என்று பவுல் விளக்குகிறார்.

ஆ. கிறிஸ்தவ ஜீவியத்திற்கும், இரட்சிப்புக்கும் தொடர்பான கிருபை –நியாயப்பிரமாணம் அவை இரண்டிற்கும் உள்ள வேறுபாடுகளை இப்பாடம் நமக்கு அறிமுகப்படுத்துகிறது.

## VII. சிந்திக்க வேண்டிய இரண்டு முக்கியப்பகுதிகள் :

அ. யோவான் 1:17 “நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய் கொடுக்கப்பட்டது; கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின.” கிறிஸ்துவின் மூலமாய் ஒரு புதிய முறை ஆரம்பமானது. மோசேயின் நியாயப் பிரமாணம் கிறிஸ்துவுக்குள் நிறைவேற்றப்பட்டு ஒரு முடிவுக்கு வந்துவிட்டது.

ஆ. ரோமர் 10:4, விசுவாசிக்கிற எவனுக்கும் நீதிஉண்டாகும்படியாக கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக் கிறார். நியாயப்பிரமாணம் தேவனுடைய நீதியை வெளிப்படுத்தினது. ஆனால் ஒருவரையும் நீதிமானாக்க வில்லை (ரோமர் 8:3). நியாயப் பிரமாணம் இல்லாமல் தேவநீதி வெளியாக்கப்பட்டிருக்கிறது (ரோமர் 3:21). இயேசு கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் தேவநீதியே (ரோமர் 3:22; பிலிப்பியர் 3:9).

## VIII. நியாயப்பிரமாணத்தைக் குறித்துச் சுருக்கமான பாடம் :

அ. நியாயப்பிரமாணம் என்றால் என்ன?

1. மோசே பத்து கட்டளைகளை பெற்ற நாள் முதல் கிறிஸ்துவின் மரணம் வரைக்கும் ஒரு யுகம். அதாவது, நியாயப்பிரமாணத்தின் காலம் என்று அழைக்கப்படுகிறது. “நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது” (கலாத்தியர் 3:24).
2. தேவன் மனிதனோடு செயல்படக்கூடிய முறையை மூன்று பகுதிகளாக மோசேக்குக் கொடுத்தார் :

| | | |
|---|---|---|
| i) கட்டளைகள் | .. | யாத்திராகமம் 20:1–26 |
| ii) நியாயத்தீர்ப்புகள் | .. | யாத்திராகமம் 21:1;24:11 |
| iii) நியமங்கள் | .. | யாத்திராகமம் 24:12; 31:18 |

கட்டளைகள் தேவனுடைய பரிசுத்த சித்தத்தை வெளிப்படுத்தினது. நியாயத்தீர்ப்புகள் இஸ்ரவேல் ஜனங்களின் சமுதாய வாழ்க்கையை ஆண்டு நடத்தியது. நியமங்கள் இஸ்ரவேல் ஜனங்களின் மதவாழ்க்கையை சீர்படுத்தி நடத்தியது.

3. பொதுவாக கிறிஸ்துவும், அப்போஸ்தலனாகிய பவுலும் நியாயப் பிரமாணத்தைக் குறித்துப் பேசியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, பத்து கட்டளைகள் அவர்கள் இருவருடைய மனதிலும் இருந்தது (மத்தேயு 5:17; 19:17; 22:37–40; கலாத்தியர் 3:10–34).

ஆ. நியாயப்பிரமாணத்தின் நோக்கம் என்ன? கலாத்தியர் 3:19–24 வசனங்களை வாசிக்கவும்.

1. நியாயப்பிரமாணமானது அக்கிரமங்களினிமித்தமாகக் கூட்டப்பட்டது (கலாத்தியர் 3:19). “பாவம் இன்னதென்று நியாயப் பிராணத்தினால் நான் அறிந்தேனேயன்றி மற்றப்படி அறியவில்லை” (ரோமர் 7:7; 1 யோவான் 3:4; 1 தீமோத்தேயு 1:9,10). ஆகவே பாவத்தை அறிகிற அறிவு கிடைக்கின்றது.
2. உலகத்தார் யாவரும் தேவனுடைய ஆக்கினைத்தீர்ப்புக்கு உட்பட்டவர்கள் என்பதை காண்பிப்பதற்காக நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது (ரோமர் 3:19; கலாத்தியர் 3:22; ரோமர் 3:9–20).
3. நியாயப்பிரமாணம் நம்மை கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருக்கும்படி கொடுக்கப்பட்டது (கலாத்தியர் 3:24). கிரேக்கர், ரோமர் வழக்கத்தின்படி குழந்தைகள் ஒரு குறிப்பிட்ட வயதை அடையும் வரைக்கும் உபாத்தியாயர்வசம் ஒப்படைக்கப்படுவது வழக்கம். கிறிஸ்து வரும் வரைக்கும் நாம் அனைவரும் நியாயப்பிரமாணத்திற்கு உட்பட்டவர்களாய் இருந்தோம். கிறிஸ்துவின் மூலமாக நாம் அனைவரும் தேவனுடைய சுதந்திரவாளியாக மாற்றப்பட்டிருக்கிறபடியால் நாம் ஒருபோதும் நியாயப் பிரமாணத்திற்கு உட்பட்டவர்கள் அல்ல (கலாத்தியர் 3:25; 4:1–7; ரோமர் 6:14).
4. நம்முடைய சுயநீதியையும், இயலாத்தன்மையையும் பார்த்து உணரும் படியாகவே நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது (ரோமர் 10:2–4; பிலிப்பியர் 3:9).

இ. நியாயப்பிரமாணம் என்ன செய்யமுடியாது?

1. நியாயப்பிரமாணம் ஒருவரையும் நீதிமானாக்காது (கலாத்தியர் 2:16; அப்போஸ்தலர் 13:39).
2. நியாயப்பிரமாணம் ஒருவரையும் பரிசுத்தப்படுத்தாது (கலாத்தியர் 3:2,3).
3. நம்மில் ஒருபோதும் நீதியை உருவாக்குவதில்லை (கலாத்தியர் 3:21; 2:21).
4. மாம்சத்தினாலே நியாயப்பிரமாணம் பலவீனமாய் இருக்கிறது. அதாவது. வெற்றி வாழ்க்கை கொடுக்க முடியாது (ரோமர் 8:3).

5. ஆக்கினைத்தீர்ப்புக்கு உட்பட்டவர்கள் என்று சொல்வது நியாயப் பிரமாணத்தின் பணியாய் இருந்தது (ரோமர் 3:19).
6. நியாயப்பிரமாணம் எதையும் பரிபூரணப்படுத்தவில்லை (எபிரெயர் 7:18,19).

ஈ. நியாயப்பிரமாணம் என்ன செய்யும்?

1. மூடநம்பிக்கையான மதத்தையும் மதவெறியரையும் உருவாக்குகிறது (கலாத்தியர் 1:13,14).
2. நியாயப்பிரமாணம் யாவரையும் சாபத்திற்குள்ளாகக் கொண்டு வருகிறது (கலாத்தியர் 3:10).
3. ஒவ்வொரு மனிதனும் தேவனுடைய பார்வையில் குற்றவாளி என்று தீர்ப்புக் கூறுகிறது (ரோமர் 3:19; யாக்கோபு 2:10).
4. நமது தேவையையும் குற்றத்தையும் வெளிப்படுத்தி கிறிஸ்துவண்டை போகும்படி நம்மை ஆயத்தப்படுத்துகிறது (கலாத்தியர் 3:24,25).
5. நியாயப்பிரமாணத்தின்படி ஜீவிக்க விரும்புகிறவர்களுக்கு கிறிஸ்துவின் மரணத்தினால் பலன் ஒன்றுமில்லை (கலாத்தியர் 2:21; 3:21,22; 5:3,4).
6. மாம்சத்தைக் குறித்து மேன்மைபாராட்ட நியாயப்பிரமாணம் இடம் அளிக்கிறது (கலாத்தியர் 6:13).

உ. நியாயப்பிரமாணத்தோடு விசுவாசிகளுக்கு உள்ள தொடர்பு என்ன?

1. நியாயப்பிரமாணம் ஒருவரையும் இரட்சிப்பதில்லை என்றாலும் அது பரிசுத்தமும், நீதியும் நன்மையும் நிறைந்ததாகவே இருக்கிறது (ரோமர் 7:12).
2. நியாயப்பிரமாணம் என்பது பொல்லாத ஒரு காரியம் அல்ல. கிறிஸ்து நியாயப்பிரமாணத்தை அழிக்க வராமல் அதை நிறைவேற்றவே வந்தார் (மத்தேயு 5:17). கிறிஸ்து முழுவதுமாக நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்படிந்து ஜீவித்தார் (யோவான் 8:46; 1 பேதுரு 2:22). சுத்தமான, உண்மையான, நிச்சயமான, பரிபூரணமான நியாயப் பிரமாணத்தை நாமும் மதித்து நடக்க வேண்டும் (சங்கீதம் 19:7,8).
3. ஒரு விசுவாசி நியாயப்பிரமாணத்திற்கோ அல்லது அதனுடைய தீர்ப்புக்கோ உட்பட்டவர் அல்ல (ரோமர் 6:14; 10:4). ஆனால் இன்னும் அது நம்முடைய பாவத்தையும் அதற்கான தேவனுடைய தண்டனையையும் வெளிப்படுத்துகிறதாய் இருக்கிறது என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும் (ரோமர் 7:7).
4. விசுவாசிக்கிற எவனுக்கும் நீதி உண்டாகும்படியாகக் கிறிஸ்து நியாயப் பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார் (ரோமர் 10:4). விசுவாசிகளின் விருப்பம் கிறிஸ்துவுக்குள்ளாக காணப்படவேண்டும் (பிலிப்பியர் 3:9).

## IX. கிருபையைக் குறித்துச் சுருக்கமான பாடம் :

அ. கிருபை என்றால் என்ன?

1. தேவன் அன்பாகவே இருக்கிறார் (1 யோவான் 4:8,16). தேவனுடைய அன்பிலிருந்து புரண்டு ஓடிவருகிற நீரருவியே கிருபையாகும். எந்தவிதமான நன்மைகளும் எதிர்பாராமல் தேவன் மனிதனிடத்தில் காட்டக் கூடிய பட்சமே கிருபையாய் இருக்கிறது. கிருபையினாலும், கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலும் இரட்சிப்பு இலவசமாகக் கொடுக்கப்பட்டு மனிதனுடைய தேவைகள் தாராளமாகச் சந்திக்கப்படுகின்றன.
2. தேவன் மனிதன் மீது பாராட்டக்கூடிய தம்முடைய இரக்கமே கிருபை ஆகும் (தீத்து 3:4,5).
3. நியாயப்பிரமாணம் மோசேயின் மூலம் கொடுக்கப்பட்டது. கிருபையோ கிறிஸ்துவின்மூலம் வந்தது (யோவான் 1:17).
4. பெந்தெகொஸ்தே நாளில் ஆரம்பிக்கப்பட்ட இந்த கிருபையானது சபை எடுத்துக்கொள்ளப்படும் நாள் வரைக்கும் தொடர்ந்து இருக்கும் (எபேசியர் 3:2–11; 2 தெசலோனிக்கேயர் 2:2–12).

ஆ. இரட்சிப்புக்கு கிருபையினுடைய தொடர்பு என்ன?

1. கிருபை மனிதனுக்கு இரட்சிப்பைக் கொண்டு வந்தது (தீத்து 2:11).
2. கிரியைகளினாலல்ல, முற்றிலுமாக கிருபையினாலே நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் (எபேசியர்2:8,9; ரோமர் 4:4,5).
3. கிருபையானது நம்மை முதலாவது நீதிமானாக்குகிறது (கலாத்தியர் 2:16; ரோமர் 3:24). பின்பு நம்மை பரிசுத்தம் செய்கிறது (கலாத்தியர் 3:2,3).

இ. கிறிஸ்தவ ஜீவியத்திற்கு கிருபையினுடைய தொடர்பு என்ன?

1. கிருபையானது கிறிஸ்துவில் நமக்குச் சுதந்திரத்தையும் தேவனுடைய குடும்பத்தில் அவருடைய பிள்ளைகள் என்ற நிலையையும் கொடுக்கிறது (கலாத்தியர் 4:5,31).

2. இயேசுகிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கிற வாக்குத்தத்தத்தை நமக்கு கொடுக்கிறது (கலாத்தியர் 3:22).
3. கிருபையானது ஆவியில் நிறைந்த ஒரு வாழ்க்கையைக் கொடுக்கிறது (கலாத்தியர் 5:5,22). மாம்ச இச்சையானது தோற்கடிக்கப்படுகிறது (கலாத்தியர் 5:16).
4. கிருபையானது எல்லாத் தேவைக்கும் போதுமானதாய் இருக்கிறது (2 கொரிந்தியர் 12:9, 9:8 எபிரெயர் 4:16).

ஈ. நியாயப்பிரமாணம், கிருபை அல்லது விசுவாசம், கிரியைகள் எப்பொழுதாவது கலந்துவிட முடியுமா?

1. ஒளியும் இருளும், தண்ணீரும் எண்ணையும் எப்படி ஒன்றுக்கொன்று கலந்து கொள்ள முடியாதோ அதேவிதமாக நியாயப்பிரமாணம், கிருபை அல்லது விசுவாசம், கிரியைகள் கலந்துகொள்ள முடியாது.
2. இக்கருத்தை விளக்குவதற்கு கீழ்கண்ட இரண்டு தேவபகுதிகள் போதுமானது.
   i) ரோமர் 11:5,6 ''அது கிருபையினாலே உண்டாயிருந்தால் கிரியைகளினாலே உண்டாயிராது; அப்படியல்ல வென்றால் கிருபையானது கிருபையல்லவே; அன்றியும் அது கிரியைகளினாலே உண்டாயிருந்தால் அது கிருபையாயிராது; அப்படியல்ல வென்றால் கிரியையானது கிரியையல்லவே''
   ii) கலாத்தியர்5:4 ''நியாயப்பிரமாணத்தினால் நீதிமான்களாக விரும்புகிற நீங்கள் யாவரும் கிறிஸ்துவை விட்டுபிரிந்து கிருபையினின்று விழுந்தீர்கள்.''

## X. நியாயப்பிரமாணத்திற்கும், கிருபைக்கும் உள்ள சில வேற்றுமைகள் :

| | |
|---|---|
| 1. மேய்ப்பனுக்காக ஆடு கொல்லப்பட்டது | 1. ஆடுகளுக்காக மேய்ப்பன் கொல்லப்பட்டார் |
| 2. ''நீங்கள் செய்தால்'' என்ற கட்டளை கொடுக்கப்பட்டுள்ளது | 2. ''நான் செய்வேன்'' என்று கூறப்பட்டுள்ளது |
| 3. பரிபூரணமான கீழ்ப்படிதல் எதிர்பார்க்கப்படுகிறது | 3. கீழ்ப்படிதலுக்கு தேவையான வல்லமை கொடுக்கப்பட்டது |
| 4. நீதி எதிர்பார்க்கப்பட்டது | 4. நீதியானது கொடுக்கப்பட்டது |
| 5. நல்ல மனிதர் மரிக்கிறார் | 5. மோசமானபாவி இரட்சிக்கப்பட்டு ஜீவிக்கிறான் |
| 6. சாபத்தைக் கொண்டு வருகிறது | 6. சாபமானது தொலைக்கப்பட்டது |
| 7. ஒருபோதும் நீதிமானாக்கவோ பரிசுத்தமாக்கவோ செய்யாது | 7. நீதிமானாக்கிப் பரிசுத்தப்படுத்துகிறது |
| 8. நியாயத்தீர்ப்பைக் கொண்டு வந்தது | 8. பாவமன்னிப்பைக் கொண்டு வந்தது |
| 9. அடிமைப்படுத்தினது | 9. விடுதலையாக்குகிறது |
| 10. மோசேக்கும் கிரியைகளுக்கும் சம்பந்தப்பட்டது | 10. கிறிஸ்துவுக்கும் விசுவாசத்திற்கும் சம்பந்தப்பட்டது |
| 11. கிறிஸ்துவுக்குள் அனைவரையும் பரிபூரணப்படுத்துகிறது | 11. பரிபூரணப்படவில்லை |
| 12. ஒருவனும் நீதிமானாக்கப்படவில்லை | 12. ஒவ்வொரு விசுவாசியும் நீதிமானாக்கப்படுகிறான் |
| 13. நீங்கள் செய்யக்கூடாது என்று கட்டளை பிறப்பிக்கிறது | 13. விருப்பமுள்ளவன் வரக்கடவன் என்று அழைப்பு கொடுக்கிறது |

## XI. முடிவுரை :

அப்போஸ்தலனாகிய பவுலோடுகூட சேர்ந்து நாமும் இவ்விதமாகச் சொல்லலாம். அதாவது ''மனுஷன் நியாயப் பிரமாணத்தின் கிரியைகளில்லாமல் விசுவாசத்தினாலேயே நீததிமானாக்கப்படுகிறான் என்று தீர்க்கிறோம்'' (ரோமர் 3:28). தேவன் நம்முடைய அன்பு என்னும் திரையைத் திறந்தபொழுது கிருபை கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் இவ்வுலகத்திற்கு வந்தது. கிறிஸ்துவுக் குள்ளாக நியாயப்பிரமாணம் ஒரு முடிவுக்கு வந்துவிட்டது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிலிருந்து ஒரு புதிய யுகம் அதாவது கிருபையின் காலம் ஆரம்பமாகிவிட்டது. கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் சாபத்தை சுமந்து அதற்கான கிரயத்தை முழுவதுமாக செலுத்தித் தீர்த்து விட்டார் என்பதை நினைத்துக் கொள்ள வேண்டும். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து செய்து முடித்த அந்தக் காரியத்தில் நம்முடைய விசுவாசத்தை வைக்க வேண்டும். அது மட்டுமல்லாமல், அவர் மூலமாய் கிடைக்கும் மீட்பை இலவசமாசப் பெற்று அதில் சந்தோஷப்பட வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

**மாணவர் கவனத்திற்கு :**

1. வேகமாக இப்பாடத்தை மாத்திரம் படிப்பதினால் வேத அறிவோ அல்லது ஆவிக்குரிய வளர்ச்சியோ உண்டாகாது.
2. விடைத்தாள்களில் உங்கள் விடைகளை அளிக்குமுன்னதாக பாடத்தையும், கேள்விகளையும் தெளிவாகப் புரிந்து கொண்டீர்களா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

## நியாயப்பிரமாணமும், கிருபையும், விசுவாசமும், கிரியைகளும்

*ஒவ்வொரு மாணவரும் பதில் அளித்து அனுப்ப வேண்டிய முகவரி*

*இயக்குனர், ரோக்மா இலவச அஞ்சல் வழிக் கல்வி, தபால் பெட்டி எண் - 9, மதுரை - 625 010.*

**(பூர்த்தி செய்த பின்பு விடைத்தாளை மட்டும் தனிப்படுத்தி தபாலில் அனுப்பவும்)**

**சரியான விடையை வட்டமிட்டு ○ காட்டவும்**

1. கிறிஸ்தவ வாழ்வின் இரண்டு முக்கிய காரணங்களை இந்தப் பாடத்தில் படித்திருக்கிறோம். அது என்ன?
   a. தேவபக்தியும், பரிசுத்தத்தன்மையும்
   b. விசுவாசமும், கிரியையும்
   c. சந்தோஷமும், திருப்தியும்
2. பவுலுக்கும், யாக்கோபுக்கும் இடையே தோன்றும் வேறுபாட்டை நீக்க **மூன்று** சாவி வார்த்தைகளைப் புரிந்து கொள்ள வேண்டும். **மூன்றை வட்டமிடுக.**
   a. தத்தெடுத்துக்கொள்ளுதல்
   b. தெரிந்து கொள்ளப்படுதல்
   c. நீதிமானாக்கப்படுதல்
   d. கிரியைகள்
   e. பரிசுத்தமாக்கப்படுதல்
   f. நம்பிக்கை
   g. விசுவாசம்
3. கிறிஸ்தவ வாழ்விற்கும், நற்கிரியைக்கும் உள்ள தொடர்பு என்ன?
   a. விசுவாசத்தின் அடையாளம் நற்கிரியை
   b. இரட்சிப்புக்கு நற்கிரியைகள் அவசியம்
   c. கிறிஸ்தவ வாழ்விற்கும், நற்கிரியைக்கும் சம்பந்தம் இல்லை
4. கலாத்தியர் 5–ம் அதிகாரத்தில், 'கிருபையினின்று விழுந்தீர்கள்' என்று பவுல் கூறுகிறார். அதனின் பொருள் என்ன?
   a. உங்களது இரட்சிப்பை இழந்துவிட்டீர்கள்
   b. நீங்கள் ஒருபோதும் கிருபையை அனுபவிக்க முடியாது
   c. நியாயப்பிரமாணத்திற்கு கீழ் உட்படுத்துவதும், கிருபையை மட்டுப்படுத்துவதும் ஆகும்
5. நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டதன் காரணம் என்ன?
   a. மக்களைத் தண்டிக்க
   b. பாவத்தை அறியும் அறிவைக் கொடுக்கவும், தாங்கள் தேவதண்டனைக்கு உட்பட்டவர்கள் என்பதை அறிந்து கொள்ளவும்
   c. இஸ்ரவேல் மக்களை சரியாக வாழ வைக்க
6. நியாயப்பிரமாணத்தை என்ன செய்வதற்காக கிறிஸ்து வந்தார்?
   a. அழிப்பதற்காக
   b. நிறைவேற்றுவதற்காக
   c. பூரணப்படுத்துவதற்காக

7. நியாயப்பிரமாணத்தோடு ஒரு விசுவாசியின் உறவு என்ன? (ரோமர் 8:3,4–ன்படி)
   a. நியாயப்பிரமாணத்தை கடைப்பிடிக்க வேண்டும்
   b. நியாயப்பிரமாணத்துக்கு கீழ்ப்பட்டவராக இருக்கிறார்
   c. பரிசுத்த ஆவியின்படி வாழ்வதின் மூலம் தன் வாழ்க்கையில் நியாயப்பிரமாணம் விரும்பும் நீதி நிறைவேற ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்

8. இரட்சிப்புக்கு கிருபையினுடைய தொடர்பு என்ன?
   a. கிருபை மனிதனுக்கு இரட்சிப்பைக் கொண்டு வந்தது
   b. கிருபை தேவனின் நற்பண்பை மனிதனுக்குக் காண்பிக்கிறது
   c. கிருபை மனிதனை தேவனோடு ஒப்புரவாக்கியது

9. பொருத்துக :– கீழே உள்ள வசனங்கள் விசுவாசத்தைக் குறித்து சொல்வது என்ன? **(சரியான வசனத்தை வார்த்தைக்கு முன்பு எடுத்து எழுதவும்)**

| | | |
|---|---|---|
| -------- | நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம் | a. 1 யோவான் 5:4 |
| -------- | விசுவாசத்தினால் நாம் உலகத்தை ஜெயித்திருக்கிறோம் | b. 1 பேதுரு 5:9 |
| -------- | விசுவாசத்தினால் நாம் சாத்தானை மேற்கொள்கிறோம் | c. எபிரெயர் 6:12 |
| -------- | விசுவாசத்தினால் நாம் தேவனின் வாக்குத்தத்தங்களை சொந்தமாக்கிக் கொள்கிறோம் | d. மத்தேயு 14:31,32 |
| -------- | சந்தேகம், கவலை இவைகளை மேற்கொண்டு வாழமுடியும் | e. 2 கொரிந்தியர் 5:7 |

10. பொருத்துக :– கீழே உள்ள வசனங்கள் நியாயப்பிரமாணம் என்ன செய்ய முடியாது என கூறுகிறது? **(சரியான வசனத்தை வார்த்தைக்கு முன்பு எடுத்து எழுதவும்)**

| | | |
|---|---|---|
| -------- | ஒருவரையும் நீதிமானாக்காது | a. ரோமர் 3:19 |
| -------- | ஒருபோதும் நீதியை உருவாக்குவதில்லை | b. கலாத்தியர் 2:16 |
| -------- | ஆக்கினைத்தீர்ப்புக்கு உட்பட்டவர்கள் என சொல்வது | c. எபிரெயர் 7:18,19 |
| -------- | எதையும் பரிபூரணப்படுத்தவில்லை | d. கலாத்தியர் 3:21 |

11. யாக்கோபு 2:14–26 வசனங்களில், யாக்கோபு போதிப்பது என்ன?

------------------------------------------------------------------------

12. ரோமர் 4:2–5 வசனங்களில், பவுல் போதிப்பது என்ன?

------------------------------------------------------------------------

13. "இரட்சிப்புக்கு நற்கிரியைகள் அவசியமில்லை, இருப்பினும் ஒரு விசுவாசி நற்கிரியை செய்ய வேண்டும்." இந்த வாக்கியம் பவுல் அல்லது யாக்கோபு இவர்களில் யாருக்குப் பொருந்தும்?

------------------------------------------------------------------------

14. "விசுவாசத்தின் இயற்கையான கனி கிரியையாகும். நீதிமானாக்கப்பட்டதற்கான அடையாளம் கிரியையே." இந்த வாக்கியம் பவுல் அல்லது யாக்கோபு இவர்களில் யாருக்குப் பொருந்தும்?

------------------------------------------------------------------------

15. ------------------------------ நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் ------------------------------

16. யூதர்களின் சட்டத்தின் **மூன்று** பகுதிகள் எதை குறிக்கிறது?

கட்டளைகள் : ------------------------------------------------------------

நியாயத்தீர்ப்புகள் : ------------------------------------------------------------

நியமங்கள் : ------------------------------------------------------------

17. நியாயப்பிரமாணத்தின் **இரண்டு** நோக்கங்கள் என்ன**?** (ரோமர் 3:19,20; 5:13)

ரோமர் 5:13 : -------------------------------------------------------------------

ரோமர் 3:19,20 : -------------------------------------------------------------------

18. தேவகிருபை ஒரு விசுவாசியின் -------------------------- போதுமானதாய் இருக்கிறது (எபிரெயர் 4:16).

19. நியாயப்பிரமாணம் கிருபை அல்லது விசுவாசம், கிரியைகள் எப்பொழுதாவது கலந்துவிட முடியாது. அதற்கு **இரண்டு** வேதபகுதி எழுதுக.

-----------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------

அவசியமாக உங்கள் பெயரையும் முழு முகவரியையும் தெளிவாக எழுதவும்

**பதிவு எண் :** ____________________

**முழு பெயர் :** ____________________________________________________________

**முகவரி :** ____________________________________________________________

____________________________________________________________